## தலைப்பு 206 - கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியொகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(இ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 (அ) மற்றும் 1.6.2 (அ) ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்ட முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சுற்றிக்கை ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

2019 திசெம்பர் 03 இல் 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தகைய வேண்டுதல்களிற்கு முரணானவை கீழே தரப்பட்டள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 53,400,000 கிரயமான ஆறு கட்டிடங்கள் மற்றும் 14 மோட்டார் வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 03 மோட்டார் வாகனங்கள் 2018 திசெம்பர் 31 இல் | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லா சொத்துக்களும் | மேற்கூறப்பட்ட திணைக்கள மோட்டார் வாகனங்களிற்காக மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெறுவதற்கான மதிப்பீட்டு திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளருக்கு 2018.06.12 இல் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான கணக்கிற்கு 2019 திசெம்பர் 31 இலும் கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | முறையாக இனங்காணப்பட்டு கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதிகளில் கணக்கிடப்பட வேண்டும். | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அந்த திணைக்களத்திலிருந்து உத்தியோகத்தரொருவர் வருகை தந்து மோட்டார் வாகனங்களை பரீட்சித்தார். எனினும், மேற்கூறப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான அறிக்கை இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பெறுமதியை காசுப் புத்தகத்திலுள்ள மீதியுடன் ஒப்பீடுசெய்வதற்காக கட்டு நிதியை சரி செய்தல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். எனினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அத்தகைய பெறுமதிக்கிடையில் ரூபா 77,591,654 வித்தியாசம் இருந்த போதிலும், கட்டுநிதி சரிசெய்தல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய பெறுமதியை அல்லது திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய பெறுமதியை காசுப் புத்தகத்தின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய பெறுமதியுடன் ஒப்பீடு செய்வதற்கு சரிபார்த்தல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் ஆண்டிலிருந்து கட்டுநிதி கணக்கொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

**1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணங்கள் கணக்கிற்கான இணக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச உத்தியோகத்தர்கள் முற்பணங்கள் ‘‘பீ’’ கணக்கின் வரவு மீதிக்கும் திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்கள்களின் பிரகாரமுள்ள வரவு மீதிக்கும் இடையில் 2004 இலிருந்து முன்கொண்டு வரப்பட்ட ரூபா 444,761 மீதியை இனங்காண்பதற்ன | முற்பணங்கள் கட்டுப்பாட்டு கணக்குகள் கணனி அச்சீட்டு தாள்களின் பிரகாரம் வித்தியாசங்கள் இனங்காண்பதன் மூலம் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வித்தியாசங்களை கண்டுபிடிப்பதற்குரிய தகவல்கள் திணைக்களத்திற்குரிய மூலகங்களிலிருந்து கிடைக்காதுள்ளமையால் திறைசேரி கணனியிடமிருந்தும் மற்றும் அதற்குரிய தகவல்களிலிருந்தும் கண்டுபிடிப்பதற்கு முயற்சிகளும் |

| | | |
|---|---|---|
| மூலம் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டது. எனினும்,இவ்வாறு செய்வதற்கு கஷ்டமாகவிருந்தது. |
| (ஆ) தனிப்பட்ட மீதிகளினை வகைப்படுத்துவதற்குரிய பொழிப்பின் மொத்தத்திற்கும் திணைக்கள கட்டுப்பாட்டு கணக்கின் மீதிக்கும் இடையிலான ரூபா 91,384 வித்தியாசத்திற்கான காரணங்கள் தரப்பட்டிருக்கவில்லை. | 2017 யூலை 05 இன் 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சொல்லப்பட்ட வித்தியாசங் களிற்கான காரணங்கள் தரப்பட வேண்டும். | வித்தியாசம் இனங்காணப்பட்டவுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 19,750,744 பெறுமதியான நிதியல்லா சொத்துக்களினை ஒப்புதல் செய்வதற்கு தேவையான பட்டியல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு பரீட்சிப்பதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் தாமதிக்காமல் கிடைக்கப்பெற வேண்டும். | கோரிக்கை மேற்கொண்டதன் பின்னர் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | திணைக்களத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் போன்றோர் திணைக்களத்திலுள்ள நிதிசார் கட்டுப்பாட்டிற்குரிய விளைத்திறனான உள்ளக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

கட்டுப்பாட்டு முறைமை உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய முறைமைகளை வினைத்திறனாக மேற்பார்வை செய்வதற்குரிய காலரீதியான மீளாய்வுகளை மேற்கொள்வதற்கும் அத்தகைய முறைமைகளை வினைத்திறனாக மேற்கொள்ளவும் தேவையான மாற்றங்களை அதற்கிணங்க மேற்கொள்ளவும் வேண்டும். மேலும், மேற்கூறப்பட்ட மீளாய்வுகள் எழுத்து மூலத்தில் இருக்க வேண்டியதுடன் அதன் பிரதி கண்ககாய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எனினும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு எந்தவொரு கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்ககூடியதாக இருக்கவில்லை.

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்

| அவதானிப்பு<br>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமணாங்கள் 835(2)(இ) மற்றும் 2(உ) | 2018 மார்ச் 16 இலிருந்து 2023 மார்ச் 15 வரையான 5 வருட காலப்பகுதிக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு செலுத்துவதற்கு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளாமல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்தகைய விடுபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 26 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 374.7 மில்லியன் தொகையான ஏற்பாடுகளில் ரூபா 81.4 மில்லியன் தொகையானது பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அத்தகைய செலவின விடயங்களின் சேமிப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் 6.5 சதவீதத்திலிருந்து 100 சதவீத பொருண்மையான வீச்செல்லையில் இருந்தது. அதற்கிணங்க திணைக்களமானது மதிப்பீட்டை பொருத்தமாக தயாரிப்பதில் செலுத்தியிருக்கவில்லை. | பொருத்தமான முறையில் செலவினத்தில் மதிப்பீட்டை தயாரிப்பதில் முகாமைத்துவத்தின் கவனமானது செலுத்தப்பட வேண்டும். | செலவினத்தின் மதிப்பீட்டை பொருத்தமான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் ஈடுபடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 8 செலவின விடயங்களின் கீழ் மேற்கொண்ட தேறிய ஏற்பாடுகளினை பயன்படுத்திய பின்னரான ரூபா 16,087,077 கூட்டுத்தொகையான சேமிப்புக்களை விஞ்சி ரூபா 40,563,969 இற்கு பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட தேறிய ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்களை ஏற்படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும். | தேவையான ஏற்பாடுகள் உள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 வங்கி கணக்குகளை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு புத்தகத்தின் மீதி பூச்சியமாக இருந்தபோதும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிலைமை அறிக்கையின் பிரகாரம் இது ரூபா 2,000,000 ஆக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிகள் அதற்குரிய படிவங்களிலுள்ள பெறுமதிகளுடன் ஒத்திசைந்து இருக்க வேண்டும். | காலதாமதத்தினால் இது அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் ரூபா 772,224 பெறுமதியான 52 காசோலைகள் 06 வருடங்கள் காலங்க கடந்திருந்த போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும், வங்கி நிலைமை அறிக்கையின் பிரகாரம் 06 மாதங்களை தாண்டிய அத்திகதியில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிகள் அதற்குரிய படிவங்கள் மற்றும் துணை ஆவணங்களிலுள்ள பெறுமதிகளுடன் ஒத்திசைய வேண்டும். | வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தம் ரூபா 772,224 ஆக பதிவிடப்படும். அத்தகைய தவறுகளை திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) இறந்த, சேவையிலிருந்து விலகிய மற்றும் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் | எதிர்காலத்தில் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய ரூபா 143,234 நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் 05 வருடங்களிற்கு மேலாக முன்கொண்டுவரப் படாமலிருப்பதுடன் அத்தகைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | 2012 யூலை 24 இலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையிலுள்ள உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 139,900 இடர் கடன் மற்றும் அதன் மீதான ரூபா 41,130 வட்டி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் தவணைக் கட்டணங்கள் மற்றும் அதன் மீதான வட்டியை சரியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட கடன் வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நாளதுவரையாக்கப்பட்ட ஒழுங்கமைப்பு கட்டமைப்பு வருடாந்த நடவடிக்கைகளிற்கான கட்டுநிதி கோரிக்கைத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் அதனுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பானது உரிய ஆண்டுடன் தொடர்புடையதாக நாளதுவரையாக்கப் பட்டிருந்தது. 2014 பெப்ரவரி 14 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதி கோரிக்கைத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்க வேண்டும் | உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப் பட்டிருக்காமையால் உள்ளக கணக்காய்வு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான சாத்தியத் தன்மை இல்லை. |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 04 மூலதன செயற்திட்டங்களின் பௌதீக செயன்முறை 5 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரையான மந்த நிலையிலிருந்தது. | மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சீரற்ற காலநிலை நிலவியதுடன் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் நடைமுறை பிரச்சனைகள் பெறுகை செயன்முறையில் தொடர்புடையதாக இருந்தமையால் எதிர்பார்க்கப்பட்டதை குறித்த காலத்தில் அடைய தவறியிருந்தது. |

**3.3 ஏனைய அவதானிப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 05 செயற்திட்டங்களின் சேமிப்புக்கள் ரூபா 14.48 மில்லியன் தொகையாக அவதானிக்கப்பட்டதுடன் இது மதிப்பீட்டின் 2 சதவீதம் தொடக்கம் 83 சதவீதம் வரையான வீச்செல்லையில் இருந்தது. | மேலதிக மதிப்பீடுகள் தயாரிக்கப்படக் கூடாது. | தேவைப்பாட்டிற்கிணங்க நடவடிக்கை எடுத்தல், அதிகுறைந்த கிரயத்தில் கொள்வனவு செய்தல், குறித்த காலத்தில் கட்டுநிதி பெறுகை இல்லாமை மற்றும் ஈஸ்டர் தாக்குதல் போன்ற காரணங்களால் நிலைமையொன்று தோன்றியது. |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற ஒரு சில நிறுவனங்களிற்காக குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றை பெறுவதற்காக 03 தேசிய | பொதுமக்களின் பணத்தை பயன்படுத்தலானது வினைத்திறனாகவும் சிக்கனத்தன்மை | விலைமனுக்களை கோரிய பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| பத்திரிகைகளில் 2017 சனவரி 10 இல் விலைமனுக்கான அழைப்பு தொடர்பாக அறிவித்தலை பிரசுரிப்பதற்கான ரூபா 161,000 செலவினத்தை திணைக்களம் ஏற்படுத்தியிருந்தது. எனினும், ஒரு மாதத்திற்கு மேலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுதாரரை அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால், அவர் அதிலிருந்து விலகியிருந்தார். அதனால் பத்திரிகை விளம்பரத்திற்காக செலவிடப்பட்ட தொகை வினைத்திறனாக பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | யாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் இந்த தன்மையிலான செலவினங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலைமனுதாரரின் கட்டிடத்துடன் தொடர்புடைய மதிப்பீட்டு அறிக்கையை கோரும் செய்முறை மேற்கொள்ளப்பட்டிருந்த நேரம், கட்டிடத்தின் உரிமையாளர் 2017.03.06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்தக் கட்டிடம் குத்தகைக்கு விடப்படமாட்டாது என திணைக்களத்திற்கு அறிவித்திருந்தார். |

## 3.5 முகாமைத்துவ குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்ற நான்கு உத்தியோகத்தரை மட்டும் உள்ளடக்கிய குழுவுள்ள களஞ்சிய அலுவலகம், நூலகம் மற்றும் அகற்றப்பட்ட பொருட்கள் களஞ்சியம் போன்றவற்றிற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தில் 2018 மார்ச் 16 இலிருந்து 2019 திசெம்பர் 31 வரை மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த வாடகை ரூபா 4,256,226 ஆகவிருந்தது. அதற்கிணங்க திணைக்களமானது பொது பணத்தை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்காக கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. | திணைக்களமானது பொதுப்பணத்தை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் முகாமைத்துவம் செய்வதற்கு குறித்த காலத்தில் கவனஞ் செலுத்த வேண்டும். | கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழுள்ள களஞ்சிய அலுவலகம் மற்றும் நூலகம் சொல்லப்பட்ட கட்டிடத்தில் அமைந்துள்ளது. இன்றுவரை பிரதம பணிப்பாளர் ஒருவரை அமர்த்தாமையால் பிரதம பணிப்பாளரிற்காக ஒதுக்கப்பட்ட அலுவலக அறை ஒன்றிலுள்ள மகசம அலுவலகத்தில் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று 2011 யூலை 28 இலிருந்து அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் இன்றுவரை அது வெற்றிடமாகவிருந்தது. | நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு பிரிவொன்று திணைக்களங்களில் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருப்பதுடன் தனிப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். | உங்களுடைய சிபாரிசுடன் இது இணங்கப்பட்டது. |